1979 மார்ச் 8]

திரு. மு. கருணாநிதி: மின்சாரத் துறை அமைச்சர் சொல்வது வெட்கப்படக் கூடியது என்று நான் சொல்லவில்லை—முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லாதது வெட்கக் கேடாக இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று இல்லை. பழைய முதல்வருக்கு—எதிர்க் கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும்—முதலமைச்சரின் சார்பில் மற்ற அமைச்சர்கள் பதில் சொல்ல வாய்ப்பும், உரிமையும் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெருந் தலைவர் காமராசர் அவர்கள் இந்த அவையில் முதல் அமைச்சராக இருந்த போது, பட்ஜெட் உரையிலோ, கவர்னர் உரையிலோ அவர் பேசுவது கிடையாது. அவருக்குப் பதிலாக அப்போது நிதியமைச்சராக இருந்த சுப்பிரமணியமோ, அல்லது பக்தவத்சலனார் அவர்களோ பேசுவார்கள். ஆகவே அவர் முதல் அமைச்சராக இருந்தபோது, கேள்விகளுக்கும் இவர்கள் தான் பதிலளிப்பார்கள்—அவர் பதில் அளிப்பது கிடையாது. அந்த முறை இருந்தால் பரவாயில்லை. பட்ஜெட் உரை, கவர்னர் உரை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது உரை என்று வருகிறபோது, 5 மணி 6 மணி நேரம் பேசுகிற முதல் அமைச்சர், கேள்வி நேரம் என்றால் பேசுவது கிடையாது, பதில் சொல்ல நேரம் இல்லை என்றால், அது மிகுந்த மன வேதனையை அளிப்பதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பதில் சொல்ல நேரம் இல்லை என்பது அல்ல. எதிர்க்கட்சியைச் பொறுத்தவரையில் பதில் கிடைக்க வேண்டும் என்று ஆவலாக இருப்பது புரிகிறது. முதலமைச்சர் பதில் சொல்லாத நேரங்களில், முதலமைச்சரின் சார்பில், அவருடைய நிர்வாகத்தின் சார்பில், அமைச்சரவையின் சார்பில் எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விவசாயிகளின் போராட்டம், சிம்கோ மீட்டர் தொழில் நிறுவனத் தகராறு ஆகியவை குறித்து

திரு. மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. நேற்றைய தினம் இந்த அவையில் இரண்டு பிரச்னைகள்—அவைகளுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

ஒன்று, நாடெங்கிலும் நடைபெறுகிற விவசாயிகளுடைய போராட்டம் குறித்து முடிவு காண வேண்டும் என்று, மறுநாள் காலை அதாவது இன்று காலை 10 மணிக்கு அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இரண்டு, தொழிலாளர்கள் போராட்டம், திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் அவதூறுகள், கோஷங்கள், அதன் காரணமாக சட்டசபையில் எழுந்த எழுச்சிக்கும், அந்த அடிப்படையில் எழுந்த கேள்விகளுக்கும் முடிவு காண அனைத்துக் கட்சிக் கூட்டம் மாலை 6 மணிக்கு கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நான் கூட சொன்னேன். இப்படி திடீரென்று கூட்டினால், எல்லோரும் கலந்து கொள்வதாக இருந்தால் முன் அறிவிப்புத் தேவையில்லையா என்று. அதன்படி இன்று காலை 10 மணிக்கு விவசாயிகள் பிரச்னை பற்றியும், மாலை 6 மணிக்கு தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றியும் கூட்டம் கூட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், பத்திரிகைகளில் சிம்கோ மீட்டர்ஸ் கூட்டத்தைப் பற்றித்தான் விளம்பரம் போட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்னையைப் பற்றி 5, 6 பேருக்கு தந்தி கொடுத்தால், டெலிபோன் பண்ணினால் கூட அனைவரும் வந்து விட முடியும்.

ஆனால் விவசாயிகளின் பிரச்னை என்றால் நாடு முழுவதும் இருக்கும் பல விவசாய சங்கத் தலைவர்கள் வந்து கலந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதற்கு பத்திரிகை விளம்பரம் தராதது விவசாயிகள் வேண்டும் என்றே அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஏன் அதற்கான விளம்பரம் தரப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, நேற்றைய தினம் இரண்டு முக்கிய பிரச்னைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எதிர்க்கட்சித்தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதாக வாக்களித்தார்கள். சிம்கோ தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில் அந்தத் தொழிற் சங்கப் பிரச்னையைப் பற்றிப் பேசுகிற அந்தக் கூட்டத்திற்கு எல்லோருக்கும் கடிதங்கள் அனுப்பலாம் என்று பார்த்து, கடிதங்கள் அனுப்புவது என்பதை விட விளம்பரம் போட்டு விட்டு, யார் யார் அதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார்

களோ அவர்கள் வந்தால் போதும் என்று விளம்பரம் போடப் பட்டு இருக்கிறது. விவசாயிகள் சங்கத்தைப் பொறுத்த வரையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், எல்லோருக் கும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் என்னாலே அனுப்பப் பட்டு இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல அந்த உச்ச மட்டக் குழுவில் இருக்கும் விவசாயி சங்கப் பிரதிநிதிகளும் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். விவ சாய சங்கப் பிரச்னைக் குறித்து பேச வேண்டும் என்று விரும்பு கிற எல்லோரும் வாருங்கள் என்று விளம்பரம் போட்டால் ஒரு வேளை அது மிகப்பெரிய மாநாடு போல் ஆகிவிடும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் உணர்வார்கள். ஆகவே, இரண்டு கூட்டங்களும் இன்று நடக்கின்றன. இரண்டு கூட்டங்களுக்கும் சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருக் கிறார்கள். விவசாய சங்கப் பிரச்னையைப் பொறுத்தவரையில் அனைத்துக்கட்சித் தலைவர்களும், அதே போன்று விவசாய சங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நெல்லை மாவட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவரது கார் தாக்கப்பெற்றது குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மீண்டும் அதைப் பற்றி அல்ல. இந்த அவையில் விவாதத்திற்கு உட்படுத்தப் பட்டு, அவையின் பொருளாக ஆகிவிட்ட ஒரு பொருள் குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் ஒன்றை வைக்க விரும்பு கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் நான் சுற்றுப்பயணம் செய்த போது என் வேன் மீது, என் காரைப் பார்த்து உளி வீசப்பட்ட நிகழ்ச்சி குறித்து இங்கே விவாதிக்கப்பட்டு, முதல் அமைச்சர் அவர்களும் அதற்காக வருத்தம் தெரிவித்து, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அவை முன்னவர் அவர்களும் அதற்கான உறுதிமொழி அளித்தார். கைது செய்யப்பட்ட செபாஸ்டின், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் என்று அங்கேயுள்ள இன்ஸ்பெக்டர் கோர்ட்டிலே புகார் கொடுத்து இருக்கிற அந்த மனுவில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கே யுள்ள மருத்துவ மனையில் அதே இன்ஸ்பெக்டர் கொண்டு போய்ச் சேர்த்து கைது செய்யப்பட்டவர் சார்பாக யாரும் வராமல், போலீஸ்காரர்களே அவருக்குப் பைத்தியம் இருக்கிறதா பாருங்கள் என்று ஆஸ்பிடலில் சேர்த்து அங்கேயுள்ள டாக்டர்கள் அப்படி எந்தவிதமான சான்றிதழையும் கொடுக்காத காரணத் தால், திடீரென்று சென்னையில் இருக்கின்ற கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று இருக்கிறார்கள். ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டிருக்கலாம். அதற்காக